**Latest Notes Tnpsc Group 2&4 Vao =Tet &Pg TRB Exams Tamil Material**

# தமிழ் சமச்சீர் கல்வி புத்தகம்

# 12-ஆம் வகுப்பு

## கடவுள் வாழ்த்து

**சொற்பொருள்:**

- ஒன்றேயென்னின் - ஒன்றே என்று கூறின்
- நம்பி - இறைவன்

**இலக்கணக்குறிப்பு:**

- வாழ்க்கை - தொழிற்பெயர்
- அம்மா - வியப்பிடைச்சொல்

**ஆசிரியர் குறிப்பு:**

- கம்பர் சோழ நாட்டுத் திருவழுந்தூரில் பிறந்தவர்.
- இவரின் காலம் கி.பி. பனிரெண்டாம் நூற்றாண்டு.
- கம்பரைத் திருவெண்ணெய் நல்லூர் சடையப்ப வள்ளல் என்பார் ஆதரித்து வந்தார்.
- “கவிச்சக்ரவர்த்தி” எனப் போற்றப்படுபவர் கம்பர்.
- “கல்வியில் பெரியவன் கம்பன், கம்பன் வீட்டுக் கட்டுத்தறியும் கவிபாடும், விருத்தமென்னும் ஒண்பாவிற்கு உயர் கம்பன்” என்னும் தொடர்கள் அவர்தம் பெருமையை விளக்குகின்றன.
- நூல்கள் = சடகோபர் அந்தாதி, ஏரெழுபது, சிலை எழுபது, திருக்கை வழக்கம், சரஸ்வதி அந்தாதி.

**நூற் குறிப்பு:**

- வடமொழியில் வான்மீகி முனிவர் இயற்றிய இராமாயணத்தை தழுவி, தமிழில் கவிப் பேரரசர் கம்பர் இயற்றியது கம்பராமாயணம்.
- கம்பரால் இயற்றப்பட்டதால் “கம்பராமாயணம்” என வழங்கப்படுகின்றது.
- கம்பர் தம்நூலுக்கு இட்ட பெயர் “இராமாவதாரம்”

tnpsctamilnadu.weebly.com

## மொழி வாழ்த்து

### சொல்பொருள்:

- நண்ணும் - கிட்டிய
- இசைத்த - பொருந்தச் செய்த
- வண்ணம் - ஓசை
- பிறமொழி - வேற்றுமொழி
- வண்மை - வளமை

### இலக்கணக்குறிப்பு:

- அசைத்த, இசைத்த - பெயரெச்சம்
- உலகம் - இடவாகுபெயர்
- திருந்துமொழி - வினைத்தொகை
- வாழிய - வியங்கோள் வினைமுற்று
- அடிவாழ்த்துவம் - இரண்டாம் வேற்றுமைத்தொகை
- வாழ்த்துவம் - தன்மைப் பன்மை வினைமுற்று

### நூல் குறிப்பு:

- தோரமங்கலம் திரு.அ.வரதநஞ்சையப் பிள்ளை இயற்றியது "தமிழரசி குறவஞ்சி".
- 96வகை சிற்றிலக்கியங்களுள் குறவஞ்சியும் ஒன்று.
- தமிழரசி குறவஞ்சியின் பாட்டுடைத் தலைவன் = சுவாமிமலை முருகப்பெருமான்.
- தமிழன்னையையே பாட்டுடைத் தலைவியாக்கி இந்நூல் இயற்றப்பட்டுள்ளது.

### ஆசிரியர் குறிப்பு:

- தமிழரசி குறவஞ்சியை இயற்றியவர் தோரமங்கலம் திரு.அ.வரதநஞ்சையப் பிள்ளை.
- பெற்றோர் = அப்பசாமிப் பிள்ளை, வரதாயி அம்மையார்.
- இவர் விரைந்து கவி பாடுவதில் வல்லவர்.
- கரந்தை தமிழ் சங்கத்தில் "ஆசிரியர்" என்னும் சிறப்புப்பட்டம் பெற்றவர்.
- "புலவரேறு" எனச் சிறப்பிக்கபடுவார்.
- கரந்தை தமிழ் சங்கத்தில் நமச்சிவாய முதலியார் தலைமையில் "தங்கத் தோடா" பரிசு பெற்றுள்ளார்.
- தமிழவேள் உமாமகேசுவரனார் இவரிடம் கேட்டு கொண்டதற்கு இணங்க இந்நூலை இயற்றினார்.
- இந்நூலை கரந்தை தமிழ் சங்கத்தின் வெள்ளி விழாவின் பொது ஞானியரடிகள் தலைமையில் அரங்கேற்றினர்.

tnpsctamilnadu.weebly.com

## நாட்டு வாழ்த்து

**சொற்பொருள்:**

- வாடின - தளர்ந்த
- ஓடின - மறைந்தன

**இலக்கணக்குறிப்பு:**

- தினந்தினம் - அடுக்குத்தொடர்
- வந்தவர் - வினையாலணையும் பெயர்
- போனவர் - வினையாலணையும் பெயர்
- இல்லாதவர் - எதிர்மறை வினையாலணையும் பெயர்
- யாரையும் - முற்றும்மை

**நூல் குறிப்பு:**

- "நாமக்கல் கவிஞர் பாடல்கள்" என்னும் நூலில் கவிஞரின் பாடல்கள் பல தொகுக்கப்பட்டுள்ளது.
- கவிஞர் சத்தியாகிரகத் தொண்டர்கள் பாடுவதற்கென இயற்றிய சில பாடல்கள் "என்னுடைய நாடு" என்னும் தலைப்பில் தேசிய மலரில் இடம் பெற்றுள்ளன.

**ஆசிரியர் குறிப்பு:**

- இயற் பெயர் = இராமலிங்கனார்
- பெற்றோர் = வெங்கடராமன், அம்மணியம்மாள்
- இவற் முத்தமிழிலும், ஓவியக்கலையிலும் சிறந்தவர்.
- இவர் தமிழக அரசின் அரசவைக் கவிஞராக இருந்தார்.
- தமிழக அரசு இவரை சட்ட மேலவை உறுபினராக நியமித்தது.
- நடுவண் அரசு இவருக்கு "பத்மபூஷன்" விருது வழங்கி சிறப்பித்துள்ளது.

## புறநானூறு

**சொற்பொருள்:**

- கயன்முள் - மீன்முள்
- திரைகவுள் - சுருக்கங்களை உடைய கன்னம்
- கணிச்சி - மழுவாயுதம்
- திறல் - வலிமை
- ஒருவன் - எமன்
- ஆறு - நெறி

**இலக்கணக்குறிப்பு:**

- கயன்முள் - ஆறாம் வேற்றுமைத்தொகை



tnpsctamilnadu.weebly.com

- திரைகவுள் - வினைத்தொகை
- கூர்ம்படை - பண்புத்தொகை
- ஆற்றீர் - முன்னிலை பன்மை எதிர்மறை வினைமுற்று
- படூஉம் - இசைநிறை அளபெடை

நூல் குறிப்பு;

- புறம் + நான்கு + நூறு = புறநானூறு
- இந்நூலை புறப்பாட்டு, புறம் எனவும் அழைப்பர்.
- நானூறு பாடல்கள் உள்ளன.
- இதனை தொகுத்தவர், தொகுப்பித்தவர் பெயர் தெரியவில்லை.
- இந்நூலின் 11 புறத்திணைகளும், 65 துறைகளும் எடுத்தாளப்பட்டுள்ளன.
- ஜி.யு.போப் இந்நூலின் சில பாடல்களை மொழிபெயர்த்து வெளியிட்டுள்ளார்.

ஆசிரியர் குறிப்பு:

- நரிவெரூஉத் தலையார்.
- இவரால் பாடப்பட்டவன் சேரமான் கருவூரேறிய ஒள்வாட் கோப்பெருஞ்சேரலிரும்பொறை ஆவான்.
- இவர் இயற்றிய பாடல்கள் குறுந்தொகையிலும், திருவள்ளுவமாலையிலும் உள்ளன.

## அகநானூறு

சொற்பொருள்:

- பசை - ஒட்டும் பசை(ஈரம்)
- பச்சை - தோல்
- மாச்சிறைப் பறவை - கரிய சிறகுகள் உடைய வௌவால்
- முதுமரம் - பழையமரம்
- முகை - மொட்டு
- கடிமகள் - மணமகள்
- கதப்பு - கூந்தல்
- தண்பதம் - குளிர்பதம்

இலக்கணக்குறிப்பு:

- உயர்சினை - வினைத்தொகை
- சிறைப்பறவை - இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை
- பகலுறை - ஏழாம் வேற்றுமைத்தொகை
- முதுமரம் - பண்புத்தொகை



tnpsctamilnadu.weebly.com

- கடிமகள் - உரிச்சொற்றொடர்
- புல்லார் - இரண்டாம் வேற்றுமைத் தொகை
- வல்விரைந்து - ஒருபொருட்பன்மொழி

நூல் குறிப்பு:

- அகம் + நான்கு + நூறு = அகநானூறு
- அடி எல்லை = 13 முதல் 31
- நானூறு பாடல்கள் உள்ளன.
- தொகுத்தவர் = மதுரை உப்பூரி குடிகிழார் மகன் உருதிரசன்மனார்
- தொகுபித்தவர் = பாண்டியன் உக்கிரப் பெருவழுதி
- வேறுபெயர்கள் = அகம், நெடுந்தொகை
- இந்நூலில் மூன்று பகுதிகள் உள்ளன.
- முதல் 120 பாடல்கள், “களிற்றியானை நிறை” எனப்படும்.
- அடுத்த 180 பாடல்கள், “மணிமிடை பவளம்” எனப்படும்.
- கடைசி 100 பாடல்கள் “நித்திலக்கோவை” எனப்படும்.
- 1,3,5 என ஒற்றைப்படை எண்கள் அமைந்த பாடல்கள் = பாலைத்திணை பாடல்கள்
- 2,8 என வரும் பாடல்கள் = குறிஞ்சித்திணை பாடல்கள்
- 4,14 என வரும் பாடல்கள் = முல்லைதிணைப் பாடல்கள்
- 6,16 என வரும் பாடல்கள் = மருதத்திணை பாடல்கள்
- 10,20 என வரும் பாடல்கள் = நெய்தல் திணை பாடல்கள்.

## நற்றிணை

சொற்பொருள்:

- இறவு - இறாமீன்
- முதல் - அடி
- பிணர் - சருச்சரை(சொர சொரப்பு)
- தடவு - பெருமை
- சுறவு - சுறாமீன்
- கொடு - கொம்பு
- மருப்பு - தந்தம்
- உழை - பெண்மான்
- உரவு - வலிமை

இலக்கணக்குறிப்பு:

- இறவுப்புறம் - ஆறாம் வேற்றுமைத்தொகை

- களிற்று மருப்பு - ஆறாம் வேற்றுமைத்தொகை
- முள்ளிலை - இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை
- நன்மான், நெடுந்தேர் - பண்புத்தொகை
- செலீஇய - சொல்லிசை அளபெடை

நூல் குறிப்பு:

- நன்மை + திணை = நல் + திணை = நற்றிணை
- எட்டுத்தொகை நூல்களுள் முதலாவதாக அமையப்பெற்றது நற்றிணை.
- நானூறு (400) பாடல்கள் உள்ளன.
- அடி எல்லை = 9 முதல் 12
- இந்நூலின் கடவுள் வாழ்த்துப் பாடல் பாடியவர் பாரதம் பாடிய பெருந்தேவனார்.
- தொகுத்தவர் = பன்னாடு தந்த பாண்டியன் மாறன் வழுதி

ஆசிரியர் குறிப்பு:

- நக்கண்ணையார் பெண்பாற் புலவர் ஆவார்.
- இவர் "பெருங்கோழி நாயக்கன் மகள் நக்கண்ணை" என் கூறப்படுபவர்.
- உறையூர் வீரை வேண்மான் வெளியன் தித்தன் என்னும் சோழ மன்னனின் மகன் போரவைக் கோப்பெருநற்கிள்ளி ஆவான்.
- அவன் தன் தந்தையோடு பகைத்துக் கொண்டு நாடிழந்து, வறுமையில் புல்லரிசிக் கூழுண்டு வாழ்ந்து வந்தான்.
- அந்நிலையிலும் ஆமூர் மல்லன் என்பவனை போரில் வெற்றி கொண்டான்.
- அவன் வீரத்தைக் கண்ட நக்கண்ணையார் அவ்வரசனைத் தாம் மணந்து கொள்ள விரும்பியதாக அவர் பாடிய புறநானூற்று 83,84,85 ஆம் பாடல்கள் மூலம் அறியலாம்.

## குறுந்தொகை

சொற்பொருள்:

- ஒழுகுநீர் - ஓடுகின்ற நீர்
- ஆரல் - ஆரல் மீன்
- குருகு - நாரை

இலக்கணக்குறிப்பு:

- யாரும் - முற்றும்மை
- ஒழுகுநீர் - வினைத்தொகை
- குருகும் - இழிவு சிறப்பும்மை

நூல் குறிப்பு:

- குறுமை + தொகை = குறுந்தொகை
- அடி எல்லை = 4 முதல் 8
- இந்நூலின் கடவுள் வாழ்த்துப் பாடல் பாடியவர் பாரதம் பாடிய பெருந்தேவனார்.
- நானூற்றி ஒரு (401) பாடல் உள்ளன.

ஆசிரியர் குறிப்பு:

- கபிலர் பாண்டி நாட்டிலுள்ள திருவாதவூரில், அந்தணர் மரபில் பிறந்தவர்.
- கடையெழு வள்ளல்களுள் ஒருவனான பாரியை உயிர்த் தோழராக கொண்டவர்.
- பாரியின் அவைகளப் புலவராக விளங்கியவர்.
- இவர் குறிஞ்சித் திணை பாடல்கள் பாடுவதில் வல்லவர்.

கபிலரை பற்றிய புகழுரைகள்:

- நக்கீரர் = வாய்மொழிக் கபிலன்
- பெருங்குன்றூர்க் கிழார் = நல்லிசைக் கபிலன்
- பொருந்தில் இளம்பூரனார் = வெறுத்த கேள்வி விளங்கு புகழ் கபிலன்
- மாறோக்கத்து நப்பசலையார் = புலனழுக்கற்ற அந்தணாளன், பொய்யா நாவிற் கபிலன்

## ஐங்குறுநூறு

சொற்பொருள்:

- மறு - குற்றம்
- தூவி - இறகு
- மரபு - முறைமை
- ஓதி - கூந்தல்
- கிளை - சுற்றம்
- ஊன் - தசை
- நிணம் - கொழுப்பு
- வல்சி - உணவு
- போலாம் - பொன்
- விறல் - வலிமை

இலக்கணக்குறிப்பு:

- பச்சூன், பைந்நிணம் - பண்புத்தொகை
- பொலம்புனை - மூன்றாம் வேற்றுமைத்தொகை
- புனைகலம் - வினைத்தொகை
- வேற்காளை - இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை

tnpsctamilnadu.weebly.com

- காளை - உவமையாகுபெயர்

நூல் குறிப்பு:

- ஐந்து + குறுமை + நூறு = ஐங்குறுநூறு
- அடி எல்லை = 3 முதல் 6
- ஐநூறு (500) பாடல்கள் உள்ளன.
- ஒவ்வொரு திணைக்கும் நூறு பாடல்கள் உள்ளன.
- குறிஞ்சித் திணை பாடல்கள் பாடியவர் = கபிலர்
- முல்லைத் திணை பாடல்கள் பாடியவர் = பேயன்
- மருதத் திணை பாடல்கள் பாடியவர் = ஓரம்போகி
- நெய்தல் திணை பாடல்கள் பாடியவர் = அம்மூவன்
- பாலை திணை பாடல்கள் பாடியவர் = ஓதலாந்தை
- இந்நூலில் கடவுள் வாழ்த்து பாடியவர் பாரதம் பாடிய பெருந்தேவனார்.
- தொகுத்தவர் = புலத்துறை முற்றிய கூடலூர் கிழார்
- தொகுபிதவர் = சேரமான் யானைக் கட்சேய்மாந்தரஞ் சேரலிரும்பொறை

ஆசிரியர் குறிப்பு:

- ஆந்தையார் என்பது இயற்பெயர்.
- ஓதலூர் என்னும் ஊர்.
- ஓதலூர் மேலைக் கடற்கரைக் பகுதியில் குட்டநாட்டில் உள்ளது.
- ஆந்தை என்பது ஆதன் தந்தை என்பதன் மரூஉ.

## திருக்குறள்

சொற்பொருள்:

- வையகம் - உலகம்
- தினை - மிகச் சிறிய அளவு
- சால்பு - நிறைபண்பு
- மாசு - குற்றம்
- அகழ்வாரை - தோண்டுபவரை
- பொறுத்தல் - மன்னிக்க
- ஓரால் - நீக்குதல்
- மடவார் - அறிவிலிகள்
- நன்றி - நன்மை
- பனை - ஒரு பேரளவு
- கேண்மை - நட்பு
- விழுமம் - துன்பம்
- தலை - சிறந்த அறமாகும்
- இன்மை - வறுமை
- வன்மை - வலிமை
- பொறை - பொறுத்தல்



tnpsctamilnadu.weebly.com

- விருந்து - புதியராய் வந்தவர்
- நிறை - சால்பு
- பொன்றும் - அழியும்
- அற்றம் - அழிவு
- அரண் - கோட்டை
- ஓரீஇ - நீக்கி
- ஒட்பம் - அறிவுடைமை
- கூம்பல் - குவிதல்
- அதிர - நடுங்கும் படி
- நோய் - துன்பம்
- திட்பம் - வலிமை
- ஊறு - பழுதுபடும் வினை
- ஓரால் - செய்யாமை
- ஆறு - நெறி
- கோள் - துணிபு
- கொட்க - புலப்படும் படி
- வீறு - செய்தல்
- திண்ணியர் - வலியர்

இலக்கணக்குறிப்பு:

- செய்யாமல் - எதிர்மறை வினையெச்சம்
- செய்த - இறந்தகால பெயரெச்சம்
- வையகமும் வானகமும் - எண்ணும்மை
- தூக்கார் - முற்றெச்சம்
- தூக்கின் - எதிர்கால பெயரெச்சம்
- செயின் - வினையெச்சம்
- தெரிவார் - வினையாலணையும் பெயர்
- சால்பு - பண்புப்பெயர்
- மறவற்க - எதிர்மறை வியங்கோள் வினைமுற்று
- எழுபிறப்பும் - முற்றும்மை
- துடைத்தவர் - வினையாலணையும் பெயர்
- உள்ள - வினையெச்சம்
- கொன்றார் - வினையாலணையும் பெயர்
- அகழ்வார் - வினையாலணையும் பெயர்
- பொறுத்தல் - தொழிற்பெயர்
- விருந்து - பண்பாகு பெயர்
- ஓரால், பொறை - தொழிற்பெயர்
- நீங்காமை - எதிர்மறை தொழிற்பெயர்
- போற்றி - வினையெச்சம்
- ஒருத்தார் - வினையாலணையும்

- செய்தாரை - வினையாலணையும் பெயர்
- இன்னா சொல் - ஈறுகெட்ட எதிர்மறை பெயரெச்சம்
- அற்றம் - தொழிற்பெயர்
- உய்ப்பது - வினையாலணையும் பெயர்
- கூம்பல் - தொழிற்பெயர்
- அஞ்சுவது - வினையாலணையும் பெயர்
- அதிர - வினையெச்சம்
- மனத்திட்பம் - ஆறாம் வேற்றுமைத்தொகை
- ஏற்றா - ஈறுகெட்ட எதிர்மறை பெயரெச்சம்
- யார்க்கும் - முற்றும்மை
- எய்தி - வினையெச்சம்

பெயர்

- துறந்தார் - வினையாலணையும் பெயர்
- உண்ணாது - எதிர்மறை வினையாலணையும் பெயர்
- ஓரீஇ - சொல்லிசை அளபெடை
- எண்பொருள் - பண்புத்தொகை
- அறிகல்லாதவர் - வினையாலணையும் பெயர்
- அஞ்சல் - தொழிற்பெயர்
- உடையார் - குறிப்பு வினைமுற்று
- ஒல்காமை - தொழிற்பெயர்
- சொல்லுதல் - தொழிற்பெயர்
- எளிய - குறிப்பு வினைமுற்று
- மாண்டார் - வினையாலணையும் பெயர்

## நூல் குறிப்பு:

- திருக்குறள் என்பது அடையடுத்த கருவியாகுபெயர்
- இந்நூல் பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று.
- இந்நூல் அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என மூன்று பெரும்பிரிவுகளை கொண்டது.
- அறத்துப்பால் = பாயிரவியல், இல்லறவியல், துறவறவியல், ஊழியல் என நான்கு இயல்களும் 38 அதிகாரங்களையும் கொண்டது.
- பொருட்பால் = அரசியல், அங்கவியல், ஒழிபியல் என் 3 இயல்களும், 70 அதிகாரங்களையும் கொண்டது.

tnpsc

- இன்பத்துப்பால் = களவியல், கற்பியல் என் 2 இயல்களும், 25 அதிகாரங்களையும் உடையது.

## திருக்குறளின் வேறு பெயர்கள்

- முப்பால்,
- பொய்யாமொழி,
- வாயுறைவாழ்த்து,
- உத்தரவேதம்,
- தெய்வநூல்,
- திருவள்ளுவம்,
- தமிழ்மறை,
- பொதுமறை,
- திருவள்ளுவப்பயன்,
- பொருளுரை,
- முதுமொழி.

## திருவள்ளுவரின் வேறு பெயர்கள்

- நாயனார்,
- தேவர்,
- முதற்பாவலர்,
- தெய்வப்புலவர்,
- நான்முகனார்,
- மாதானுபாங்கி,
- செந்நாப்போதார்,
- பெருநாவலர்,
- பொய்யில் புலவர்.

# சிலப்பதிகாரம்

## சொற்பொருள்:

- வெய்யோன் - கதிரவன்
- ஈர்வளை - அறுத்து செய்யப்பட்ட வளையல்
- இலங்கு - ஒளிருகின்ற
- தோளி - கண்ணகி
- முறை - நீதி
- நிறை - கற்பு

tnpsctamilnadu.weebly.com

- படுகாலை - மாலைக்காலம்
- மாதர் - காதல்
- மல்லல் - வளம்
- கொற்றம் - அரசியல்
- வைவாள் - கூரியவாள்
- பழுது - உடல்

இலக்கணக்குறிப்பு:

- ஈர்வளை - வினைத்தொகை
- கையேந்தி - ஏழாம் வேற்றுமைத்தொகை
- காற்சிலம்பு - ஏழாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை
- நல்லுரை - பண்புத்தொகை
- தண்குடை - பண்புத்தொகை
- பொற்சிலம்பு - மூன்றாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை
- மாமதுரை - உரிச்சொற்றொடர்
- வைவாள் - உரிச்சொற்றொடர்
- வளைக்கை - இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை

நூல் குறிப்பு:

- இக்காப்பியம், "முத்தமிழ்க் காப்பியம், உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள், நாடகக் காப்பியம்" என்று பல்வேறு சிறப்புப் பெயர்களால் பாராட்டப்படுகிறது.
- கண்ணகியின் காற்சிலம்பு காரணமாக வளர்ந்த கதையாதலினால் சிலப்பதிகாரம் எனப் பெயர்பெற்றது.
- இதுவே தமிழின் முதல் காப்பியம்.
- புகார்க்காண்டம், மதுரைக்காண்டம், வஞ்சிக்காண்டம் என மூன்று (3) காண்டங்களையும், மங்கள வாழ்த்துப் பாடல் முதலாக வரந்தருகாதை ஈறாக முப்பது (30) காதைகளையும் உடையது.

நூல் கூறும் மூன்று உண்மை

- 1, அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும்,
- 2, உரைசால் பத்தினிக்கு உயர்ந்தோர் ஏத்துவர்,
- 3, ஊழ்வினை உருத்துவந்து ஊட்டும்.

ஆசிரியர் குறிப்பு:

- இந்நூலை இயற்றியவர் இளங்கோவடிகள்
- பெற்றோர் = இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன், நற்சோனை
- தமையன் = சேரன் செங்குட்டுவன்

tnpsctamilnadu.weebly.com

- காலம் கி.பி.இரண்டாம் நூற்றாண்டு
- இந்நூலுக்கு உரையெழுதிய பழைய உரையாசிரியர்கள் இருவர். ஒருவர் அரும்பதங்களுக்கு மட்டும் உரை எழுதிய அரும்பத உரைகாரர். மற்றொருவர் விளக்கமாக உரை எழுதிய அடியார்க்கு நல்லார்(இவர் உரை முழுவதுமாக கிடைக்கவில்லை)
- இக்காலத்தே வாழ்ந்த ந.மு.வேங்கடசாமி நாட்டார் உரை நூல் முழுமைக்கும் உள்ளது.

நூல் சிறப்பு:

- பாரதியார் இந்நூலின் அருமை பெருமைகளை உணர்ந்து, "நெஞ்சையள்ளும் சிலம்பு" எனப் புகழ்ந்துள்ளார்.
- கவிமணி இந்நூலை, "தேனிலே ஊறிய செந்தமிழின் சுவை தோறும் சிலப்பதிகாரம்" எனப் பாராட்டியுள்ளார்.

weebly.com

## கம்பராமாயணம்

சொற்பொருள்:

- கழல் - திருவடி
- தையல் - திருமகளாகிய சீதாப்பிராட்டி
- திண்டிறல் - பேராற்றல் மிக்க இராமன்
- மற்று - மேலும்
- திரை - அலை
- தனயை - மகள்
- உம்பி - உன் தம்பி
- கனகம் - பொன்
- அலங்கல் - மாலை
- திருக்கம் - வஞ்சனை
- வீங்கினள் - பூரித்தாள்
- தோகை - மயில்
- முளரி - தாமரை
- இறைஞ்சி - வணங்கி
- ஓதி - கூந்தல்
- துறத்தி - கைவிடுக
- மருகி - மருமகள்
- தடந்தோள் - அகன்ற தோள்
- வேலை - கடல்
- சாலை - பர்ணசாலை
- கோரல் - கொல்லுதல்
- முறிவு - வேறுபாடு
- ஆழி - மோதிரம்
- மாமணிக்கரசு - சூடாமணி

இலக்கணக்குறிப்பு:

- மொய்கழல் - வினைத்தொகை
- தழீஇ - சொல்லிசை அளபெடை
- அலைகடல் - வினைத்தொகை
- தடந்தோள் - உரிச்சொற்றொடர்
- இற்பிறப்பு - ஏழாம் வேற்றுமைத்தொகை
- கண்ணின் நீர்க்கடல் - உருவகம்
- ஆருயிர் - பண்புத்தொகை
- பேர்அடையாளம் - உம்மைத்தொகை
- மாமணி - உரிச்சொற்றொடர்
- கழல் - தானியாகு பெயர்
- தெண்டிரை - பண்புத்தொகை
- துறத்தி - ஏவல் வினைமுற்று
- பெருந்தவம் - பண்புத்தொகை
- களிநடம் - வினைத்தொகை
- கோறல் - தொழிற்பெயர்
- பொன்னடி - உவமத்தொகை
- மலரடி - உவமத்தொகை
- கைத்தலம் - இருபெயரொட்டுப் பண்புத்தொகை

## நூல் குறிப்பு:

- கம்பர் தாம் இயற்றிய இந்நூலுக்கு இராமாவதாரம் என்றே பெயரிட்டார். அதுவே கம்பராமாயணம் என்று வழங்கப்படுகிறது.
- இராம காதைக்கு ஆதிகாவியம் என்றும் அக்காதையை வடமொழியில் இயற்றிய வான்மீகிக்கு ஆதிகவி என்றும் பெயர் உண்டு.
- கம்பராமாயணம் வழி நூல் எனப்படுகிறது.
- கம்பரின் இராமாயணத்தைக் கம்ப நாடகம் எனவும் கம்பசித்திரம் எனவும் அழைப்பர்.
- கம்பரின் யாப்பு வண்ணங்கள் நூல் முழுவதும் மிளிர்கிறது. "வரமிகு கம்பன் சொன்ன வண்ணமும் தொண்ணுற்றாறே" என்று ஒரு கணக்கீடும் உள்ளது.
- தமிழ் இலக்கியத்தில் தொடங்கிய காப்பிய வளர்ச்சி கம்பர் படைப்பில் உச்ச நிலையை அடைந்தது.

**கம்பராமாயணம் 6 காண்டங்களை உடையது.** அவை

- 1.பாலகாண்டம்,
- 2,அயோத்தியாகாண்டம்,
- 3,ஆரண்யகாண்டம்,
- 4,கிட்கிந்தா காண்டம்,
- 5,சுந்தரகாண்டம்,
- 6,யுத்தகாண்டம்.

tnpsctamilnadu.w

- 7,ஏழாவது காண்டமாகிய உத்தர காண்டம் ஒட்டக்கூத்தர் எழுதினார்.

சுந்தரகாண்டம்:

- இக்காண்டாமே "காப்பியத்தின் மணிமகுடமாக" விளங்குகிறது.
- சிறிய திருவடி = அனுமன்
- அனுமனுக்கு "சுந்தரன்" என்னும் பெயரும் உண்டு.
- இராமனின் அடையாளமாக சீதையிடம் அனுமன் கொடுத்தது = கணையாழி
- சீதை அனுமனிடம் கொடுத்தது = சூடாமணி

## தேம்பாவணி

சொற்பொருள்:

- மாலி - சூரியன்
- ஆலி - மலை நீர்
- கரிந்து - கருகி
- புடை - இடையின் ஒருபக்கம்
- வியன்வட்டம் - அகன்ற கேடயம்
- கீண்டு - கிழித்து
- கிளர்ப - நிறைய
- தொழும்பர் - அடிமைகள்
- ஓகையால் - களிப்பினால்
- வெருவி - அஞ்சி
- கதத்த - சினமிக்க
- கல்நெடுங்குவடு - மலைச்சிகரம்
- நிரூபன் - அரசன்
- விளி - சாவு
- கைவயம் - தோள்வலிமை
- மெய்வயம் - உடல் வலிமை
- ஐஞ்சிலை - ஐந்து கற்கள்
- ஓதை - ஓசை
- மருகி - சுழன்று
- மிடல் - வலிமை
- செல் - மேகம்
- நுதல் - நெற்றி
- உருமு - இடி
- மருங்கு - இடுப்பு
- சிரம் - தலை
- அசனி - இடி

இலக்கணக்குறிப்பு:

- கதுவிடா - ஈறுகெட்ட எதிர்மறை பெயரெச்சம்
- அகல்முகில் - வினைத்தொகை
- கருமுகில் - பண்புத்தொகை
- கூடினர் - வினையாலணையும் பெயர்
- கதத்த - குறிப்பு பெயரெச்சம்
- கேட்டனர் - வினையாலணையும்

பெயர்

- தொடர்ந்தனன் நகைப்பான் - முற்றெச்சம்
- அஞ்சினர் - வினையாலணையும் பெயர்
- கேட்ட வாசகம் - பெயரெச்சம்
- கைவயம் - ஆறாம் வேற்றுமைத் தொகை
- அறிய ஆண்மை - குறிப்புப் பெயரெச்சம்
- இருந்த பாலன் - பெயரெச்சம்
- கருமுகில் - பண்புத்தொகை
- வைவேல் - உரிச்சொற்றொடர்
- காண்கிலர் - எதிர்மறை வினைமுற்று
- நாமவேல் - உரிச்சொற்றொடர்

## நூல் குறிப்பு;

- வீரமாமுனிவர் இயற்றியது தேம்பாவணி.
- இந்நூலில் மூன்று காண்டங்கள், முப்பத்தாறு படலங்கள், 3615 பாடல்கள் உள்ளன.
- தேம்பா + அணி = தேம்பாவணி. வாடாத மாலை எனப் பொருள்.
- தேன் + பா + அணி = தேம்பாவணி. தேன் போன்ற பாக்களை அணியாக உடைய நூல் எனப் பொருள் கொள்வர்.
- நூலின் தலைவன் = இயேசு பெருமானின் வளர்ப்புத் தந்தை சூசை மாமுனிவர்.
- இந்நூலை "கிறித்துவ சமயத்தாரின் கலைக்களஞ்சியம்" என்பர்.

## வீரமாமுனிவர்:

- இயற் பெயர் = கொன்ஸ்டான் ஜோசப்பெஸ்கி
- கொன்ஸ்டான் என்னும் இத்தாலி மொழி சொல்லுக்கு அஞ்சாமை எனப் பொருள்.
- இவர் தம் பெயரை "தைரியநாதசாமி" என மாற்றிக்கொண்டார்.
- தமிழ்ச் சான்றோர் இவரை "வீரமாமுனிவர்" என அழைத்தனர்.
- 1710ஆம் ஆண்டு தமிழ்நாட்டிற்கு வந்த இப்பெரியார் 37 ஆண்டுகள் சமயப் பணியும் தமிழ்ப்பணியும் புரிந்து 1747ஆம் ஆண்டில் அம்பலக்காடு என்னும் இடத்தில இயற்கை எய்தினார்.

## படைப்புகள்

- திருக்காவலூர் கலம்பகம்,
- கித்தேரியம்மாள் அம்மானை,
- வேதியர் ஒழுக்கம்,
- பரமார்ர்த்த குரு கதை,
- செந்தமிழ் இலக்கணம்,

tnpsctamilnadu.weebly.com

- கொடுந்தமிழ் இலக்கணம்,
- தொன்னூல் விளக்கம்,
- சதுரகராதி போன்ற பல நூல்களை இயற்றியுள்ளார்.
- திருக்குறளின் அறத்துப்பால், பொருட்பால் இரண்டையும் இலத்தீன் மொழியில் மொழி பெயர்த்துள்ளார்.

**வளன் செனித்த படலம்:**

- காப்பியத் தலைவனான வளன் என்னும் சூசை மாமுனிவர் தாவீது மன்னனின் அரச மரபில் தோன்றிய வரலாற்றை கூறுவதே வளன் செனித்த படலம் ஆகும்.
- யோசேப்பு என்றும் சூசை என்றும் ஒலிபெயர்க்கப்பட்ட ஜோசப் என்னும் பெயரை வீரமாமுனிவர் வளன் என்று தமிழ்ப்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.
- வளங்களை வளரச் செய்பவன் என்னும் பொருளுடைய எபிரேய மொழியில் சூசை என்னும் பெயர் வழங்கி வருகிறது.
- அதன் நேரிய மொழி பெயர்பே தமிழில் வளன் ஆகும்.

**கதை சுருக்கம்:**

- யூதேயா நாட்டு மன்னன் சவுல்.
- பிலித்தையர் என்பார் திருமறையை பழித்தும் கடுவுளை இகழ்ந்தும் வந்தனர்.
- அரக்கன் கோலியாத் இச்ரேயால் மக்களை இகழ்ந்து, அவர்களுள் ஒருவனை போருக்கு அழைத்தான்.
- தாவீதன் என்னும் சிறுவன் அவனிடம் போர் புரிந்து அவனை கொன்றான்.

## பாண்டியன் பரிசு

**சொற்பொருள்:**

- மின் - மின்னல்
- குறடு - அரண்மனை முற்றம்
- பதடி - பதர்
- பேழை - பெட்டி

**இலக்கணக்குறிப்பு:**

- என்மகள் - நான்காம் வேற்றுமைத்தொகை
- காத்தார் - வினையாலணையும் பெயர்
- விலகாத - எதிர்மறை பெயரெச்சம்
- ஈன்ற தந்தை - பெயரெச்சம்
- இழந்த பரிசு - பெயரெச்சம்

**ஆசிரியர் குறிப்பு:**



tnpsctamilnadu.weebly.com

- பாவேந்தர் பாரதிதாசன் புதுவையில் பிறந்தவர்.
- இயற்பெயர் = சுப்புரத்தினம்
- பெற்றோர் = கனகசபை, இலக்குமியம்மாள்
- தமிழாசிரியராக பணிபுரிந்தவர்.
- இவர் புரட்சிக் கவிஞர் என்றும், தமிழ்நாட்டு இரசூல் கம்சதேவ் என்றும் அழைக்கப்படுபவர்.
- இவரின் பிசிராந்தையார் நாடகம் சாகித்ய அகாடமி பரிசு பெற்றது.
- இவரின் "வாழ்வினில் செம்மையை செய்பவள் நீயே" என்னும் பாடல் தற்பொழுது புதுவை அரசின் தமிழ் தாய் வாழ்த்தாக உள்ளது.

கதை:

- கதிர் நாட்டு மன்னன் கதிரைவேலன்.
- அவன் மனைவி கண்ணுக்கினியாள், இவர்களின் ஒரே மகள் அன்னம்.
- கண்ணுக்கினியாள் அண்ணனும் படைத்தளபதியும் ஆன நரிக்கண்ணன் சூழ்ச்சியால் நிகழ்ந்த வேழ நாட்டு படையெடுப்பில் அரசனும் அரசியும் இறந்தனர்.
- பாண்டிய மன்னன் பரிசாக வழங்கிய உடைவாளும் மணிமுடியும் கொள்ளை அடிக்க விரும்பினான் நரிக்கண்ணன்.
- பேழையை தவறுதலாக வீரப்பனிடம் கொடுத்துவிடுகிறான் நரிக்கண்ணன்.
- பேழையை கொண்டு வந்து தருபவர்களுக்கு அன்னம் மாலையிடுவாள் என் அறிவிக்கப்பட்டது.
- அரசியின் தோழி ஆத்தாக்கிழவி. இவள் அன்னத்தின் செவிலித்தாய்.
- ஆத்தாக்கிழவியின் மகன் வேலன்.
- ஆத்தாக்கிழவியின் கணவன் வீரப்பன்.
- அன்னத்தின் தோழி நீலி

## சிற்றிலக்கியங்கள்

சொற்பொருள்:

- தூளிகை - நிலாமுற்றம்
- சாளரம் - பலகணி
- தெற்றி - திண்ணை
- பாங்கரும் - பக்கத்தில் உள்ள இடங்கள்
- பிணங்கி - நெருங்கி
- மறுகு - தெரு
- கோடி - வளைந்து
- சதகோடி - நூறுகோடி

tnpsctamilnadu.weebly.com

- மகோததி - கடல்
- சரதம் - வாய்மை
- மூவெழுகால் - 21 தலைமுறை
- பெருமாள் - அரசர்
- உதியர் - சேரர்
- பவித்ரம் - தூய்மை
- அவனி - நாடு
- கூடல் - காவிரிப்பூம்பட்டினம்

இலக்கணக்குறிப்பு:

- வாயிலும் மாளிகையும் - எண்ணும்மை
- மாடமும் ஆடரங்கும் - எண்ணும்மை
- ஆடரங்கு - வினைத்தொகை
- மயங்கி, வணங்கி - வினையெச்சம்
- காணீர் - ஏவல் வினைமுற்று
- மதயெறிது - இரண்டாம் வேற்றுமைத்தொகை
- ஓங்கியுயர் - ஒருபொருட்பன்மொழி
- எம்மருங்கும் - முற்றும்மை
- செய்குன்று - வினைத்தொகை
- சுற்றிய பாங்கர் - பெயரெச்சம்
- செற்ற சிலை - பெயரெச்சம்
- விட்டவள் - பெயரெச்சம்
- முத்து முரசம் - பண்புத்தொகை
- உயரண்டம் - வினைத்தொகை

சிற்றிலக்கியம்:

- பிரபந்தம் என்ற வடசொல்லுக்கு “நன்கு கட்டப்பட்டது” என்பது பொருள்.
- சிற்றிலக்கியங்களின் இலக்கணம் கூறுவது பாட்டியல் நூல்கள்.
- பாட்டியல் நூல்களுள் வச்சணந்திமாலை குறிப்பிட்ட நூலாகும்.
- வீரமாமுனிவர் இயற்றிய சதுரகராதியில் பிரபந்தம் 96 வகை எனக் கூறப்பட்டுள்ளது.
- இராசராச சோழன் உலா

உலா:

- உலா என்பது சிற்றிலக்கிய வகைகளுள் ஒன்று.
- உலா என்பதற்கு “பவனி வருதல்” என்பது பொருள்.
- தலைவன் வீதியில் உலா வர அவனைப் பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம்பெண் என்னும் ஏழு வகைப் பருவ மகளிரும் காதல் கொள்வதாக அமைத்து பாடுவது உலா ஆகும்.
- இது கலிவென்பாவால் இயற்றப்படும்.

- இதில் பாட்டுடைத் தலைவனின் சிறப்பு, நீராடல், ஒப்பனை செய்தல், பரிவாரங்கள் புடைசூழத் தன் ஊர்தியில் ஏறி வரல் ஆகியவற்றை உலாவின் முன்னிலை என்பர்.
- உலாவரும் தலைவனைக் கண்டு காதல் கொண்ட ஏழு பருவ மகளிர் தனித்தனியாக கூறுவன உலாவின் பின்னிலை எனப்படும்.

ஏழு பருவப் பெண்களின் வயது

- 1, பேதை(5-7),
- 2, பெதும்பை(8-11),
- 3, மங்கை(12-13),
- 4, மடந்தை(14-19),
- 5, அரிவை(20-25),
- 6, தெரிவை(26-32),
- 7, பேரிளம்பெண்(33-40)

ஒட்டக்கூத்தர்:

- இராசராசசோழன் உலாவை பாடியவர் ஒட்டக்கூத்தர்.
- இவர், "கவிச்சக்ரவர்த்தி, கவிராட்சசன்" என்றெல்லாம் புகழப்படுவார்.
- இவர், விக்ரமசோழன், இரண்டாம் குலோத்துங்கச் சோழன், இரண்டாம் ராசராசன் ஆகிய மூன்று மன்னர்களின் அவையிலும் செல்வாக்கோடு இருந்தவர்.
- இம்மூவரைப் பற்றி ஒட்டக்க்கூத்தர் பாடியதே, "மூவருலா"

இவரின் இயற் பெயர் = கூத்தர்

ஓட்டம்(பந்தயம்) வைத்துப் பாடுவதில் வல்லவர் ஆதலால் இவர் ஒட்டக்க்கூத்தர் எனப்பட்டார்

## திருவேங்கடத்தந்தாதி

சொற்பொருள்:

- கழல் - திருவடி
- பத்தி - ஊர்
- குஞ்சி - தலைமயிர்
- போதன் - பிரமன்
- வாசவன் - இந்திரன்
- அந்தி - மாலை
- வேலை - கடல்
- இருக்கு ஆரணம் - இருக்கு வேதம்

tnpsctamilnadu.weebly.com

- கஞ்சம் - தாமரை மலர்
- அணங்கு - திருமகள்
- பொழில் - சோலை

இலக்கணக்குறிப்பு:

- சிற்றன்னை - பண்புத்தொகை
- தாழ்பிறப்பு - வினைத்தொகை
- மால் கழல் - ஆறாம் வேற்றுமைத்தொகை
- கழல் - தானியாகு பெயர்
- அந்தி காளை - உம்மைத்தொகை
- வேங்கடம் - வினைத்தொகை
- மதிவிளக்கு - உருவகம்
- சேவடி - பண்புத்தொகை
- இருக்கு ஆரணம் - இருபெயரொட்டுப் பண்புத்தொகை
- நற்றாய் - பண்புத்தொகை

அந்தாதி:

- அந்தாதி 96 வகை சிற்றிலக்கியங்களுள் ஒன்று.
- அந்தம் = இறுதி, ஆதி = முதல்
- ஒவ்வொரு பாடலிலும் உள்ள இறுதி எழுத்தோ, அசையா, சீரோ அடியோ அதற்கு அடுத்து வரும் பாடலின் முதலாக வரும்படி அமைத்துப் பாடுவது அந்தாதி எனப்படும்.
- "சொற்றொடர்நிலை" எனவும் கூறுவர்.

பிள்ளை பெருமாள் ஐயங்கார்:

- இவர், "அழகிய மணவாளதாசர், திவ்வியக்கவி" எனவும் அழைக்கப்படுவார்.
- இவர் இயற்றிய எட்டு நூல்களின் தொகுதியை "அஷ்டப்பிரபந்தம்" என்று அழைப்பர்.
- "அஷ்டப்பிரபந்தம் கற்றவன் அரைப் பண்டிதன்" என்னும் பழமொழி இந்நூலின் உயர்வைப் வெளிப்படுத்தும்.
- இவர் 1623 முதல் 1659 வரை மதுரையை ஆண்ட திருமலை நாயக்க மன்னரின் அவையில் ஓர் அலுவலராய் அமர்ந்து வாழ்க்கை நடத்தி வந்தார்

## மதுரைக் கலம்பகம்

சொற்பொருள்:

- ஏமவெற்பு - மேருமலை

- ஏமம் - பொன்
- மலயாசலம் - பொதிகை மலை

இலக்கணக்குறிப்பு:

- கயிலாய வெற்பு - இருபெயரொட்டுப் பண்புத்தொகை
- அசலம் - காரணப்பெயர்
- முச்சங்கம் - பண்புத்தொகை
- வளர்கூடல் - வினைத்தொகை
- மதிப்பிஞ்சு - ஆறாம் வேற்றுமைத்தொகை
- இரைதேர் - இரண்டாம் வேற்றுமைத்தொகை

கலம்பகம்:

- பலவகை உறுப்பும் பலவகைப் பாவும் பாவினங்களும் பலவகைப் பொருளும் கலந்து செய்யப்பெறும் சிற்றிலக்கிய வகையை கலம்பகம் என்பர்.
- கதம்பம் என்பது கலம்பகம் எனத் திரிந்ததாக உ.வே.சா கூறுவார்.
- கலம்பகம் 18 உறுப்புகளை உடையது.
- தமிழின் முதல் கலம்பகம் = நந்திக் கலம்பகம்

குமரகுருபரர்:

- இவரின் காலம் பதினேழாம் நூற்றாண்டு.

பிறந்தது முதல் ஐந்தாண்டு வரை பேசாத குழந்தையாக இருந்த இவர் பின்னர் திருச்செந்தூர் முருகப் பெருமானின் அருளால் பேசினார்.

படைப்புகள்

- மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ்,
- கந்தர்கலிவெண்பா,
- காசிக்கலம்பகம்,
- முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ் போன்ற பல நூல்களை இயற்றி உள்ளார்.
- இவரது செய்யுட்களின் தனிச்சிறப்பு அவற்றின் "இன்னோசை" ஆகும்.

## முக்கூடற்பள்ளு

பள்ளு:

- "பள்" என்பது பள்ளமான நன்செய் நிலங்களையும் அங்குச் செய்யப்படும் உழவினையும் குறிக்கும்.
- பள்ளு 96 வகை சிற்றிலக்கிய வகையுள் ஒன்று.
- தொல்காப்பியர் குறிப்பிடும் எட்டு வகைப்பிரிவில் ஒன்றான "புலன்" என்னும் இலக்கிய வகை "பள்ளு வகை" இலக்கியத்திற்கு பொருந்தும்.

tnpsctamilnadu.weebly.com

முக்கூடற்பள்ளு:

- திருநெல்வேலிக்குச் சிறிது வடகிழக்கில் தண்பொருநை, சிற்றாறு, கோதண்டராம ஆறு ஆகிய மூன்று ஆறுகளும் கலக்கும் இடத்திற்கு வடக்கே உள்ள சிற்றூர் முக்கூடல்.
- அங்குள்ள இறைவனாகிய அழகர் மீது பாடப்பட்டது இந்நூல்.
- சைவ வைணவங்களை ஒருங்கிணைக்கும் இலட்சியங் கொண்ட நூல், "முக்கூடற்பள்ளு" ஆகும்.
- இந்நூலை இயற்றியவர் பெயர் தெரியவில்லை.
- இது சிந்தும் விருத்தமும் பரவிவர பாடப்பெறும்.

இலக்கணக்குறிப்பு:

- வெண்தயிர் - பண்புத்தொகை
- காய, மாய - பெயரெச்சம்
- நாழிகை வாரம் - உம்மைத்தொகை
- தாபதர் உள்ளம் - ஆறாம் வேற்றுமைத்தொகை
- செந்நெல் - பண்புத்தொகை
- சுழி வெள்ளம் - வினைத்தொகை

## மறுமலர்ச்சிப் பாடல்கள் - மாலைக்கால வருணனை

சொற்பொருள்:

- பரிதி - சூரியன்
- வண்ணம் - அழகு
- முகில் - மேகம்
- பொய்கை - நீர்நிலை
- இருட்கடல் - நீலக்கடல்
- களஞ்சியம் - தொகுப்பு

இலக்கணக்குறிப்பு;

- படர்முகில் - வினைத்தொகை
- செழும்பொன் - பண்புத்தொகை
- தங்கத்தீவு - உருவகம்
- பொற்கரை - உருவகம்
- சுடரொளி - வினைத்தொகை

நூல் குறிப்பு:



tnpsctamilnadu.weebly.com

- வடமொழியில், வியாசர் இயற்றிய மகாபாரதத்க் கதையில் வரும் பாஞ்சாலி, துரியோதனன் சபையில் செய்த சூளுரையை மையமாகக் கொண்டு, பாரதியார் இக்குறுங்காவியத்தைப் படைத்தார்.
- பாஞ்சாலிசபதம் என்னும் இந்நூலில் அழைப்புச் சருக்கம் ,சூதாட்டச் சருக்கம், அடிமைச் சுருக்கம், துகிலுரிதற்சருக்கம், சபதச் சருக்கம் ஆகிய ஐந்து சருக்கங்கள் உள்ளன.

பாரதியார்:

- இவர் 1882ஆம் ஆண்டு டிசம்பர்த் திங்கள் 11ஆம் நாள் தூத்துக்குடி மாவட்டம் எட்டயபுரத்தில் பிறந்தார்.
- பெற்றோர் = சின்னசாமி, இலக்குமி அம்மையார்.
- இளமையிலேய கலைமகள் என்னும் பொருள் தரும்,"பாரதி" என்னும் பட்டதை பெற்றார்.
- இவர் இருபதாம் நூற்றாண்டின் இலக்கிய மறுமலர்ச்சிக்கு வித்திட்டவர்.

முப்பெரும் படைப்புகள் = கண்ணன் பாட்டு, பாஞ்சாலி சபதம், குயில் பாட்டு.

## புத்தக சாலை

சொற்பொருள்:

- மனோபாவம் - உளப்பாங்கு
- சகமக்கள் - உடன் வாழும் மக்கள்
- ஒன்று - ஓரினம்
- இலகுவது - விளங்குவது
- சுவடி - நூல்
- சுவடிச்சாலை - நூலகம்
- சர்வகலாசாலை - பல்கலைக்கழகம்

இலக்கணக்குறிப்பு;

- அன்புநெறி - இருபெயரொட்டு பண்புத்தொகை
- உயர்எண்ணம் - வினைத்தொகை
- செந்தமிழ் - பண்புத்தொகை
- தருதல், வைத்தல் - தொழிற்பெயர்

ஆசிரியர் குறிப்பு:

- பாரதிதாசன் புதுவையில் 1891ஆம் ஆண்டு பிறந்தார்.
- பெற்றோர் = கனகசபை, இலக்குமி அம்மாள்
- இயற்பெயர் = சுப்புரத்தினம்

படைப்புகள்

tnpsctamilnadu.weebly.com

- குடும்ப விளக்கு,
- இருண்ட வீடு,
- தமிழியக்கம்,
- பாண்டியன் பரிசு,
- இசையமுது,
- அழகின் சிரிப்பு,
- கண்ணகி புரட்சிக்
- காப்பியம்,
- பிசிராந்தையார் போன்ற பல நூல்களை படைத்துள்ளார்.

## காடு

### ஆசிரியர் குறிப்பு;

- வாணிதாசன் புதுவையை அடுத்த வில்லியனூரில் பிறந்தவர்.
- பெற்றோர் = அரங்க திருக்காமு, துளசியம்மாள்
- இயற்பெயர் = அரங்கசாமி என்ற எத்திராசலு
- இவர் பாவேந்தர் பாரதிதாசனிடம் தொடக்கக்கல்வி பயின்றவர்.
- இவரின் பாடல்கள் சாகித்திய அகாதெமி வெளியிட்ட "தமிழ்க் கவிதைக் களஞ்சியம்" என்ற நூலிலும், தென்மொழிகள் புத்தக வெளியீட்டுக் கழகம் வெளியிட்ட "புதுதமிழ்க் கவிமலர்கள்" என்ற நூலிலும் மற்றும் பற்பல தொகுப்பு நூல்களிலும் இடம் பெற்றுள்ளன.
- இவர், "தமிழ்-பிரெஞ்ச் கையகர முதலி" என்ற நூலை வெளியிட்டார்.
- பிரெஞ்ச் குடியரசு தலைவர் இவருக்கு "செவாலியர்" என்ற விருதினை வழங்கி உள்ளார்.
- இவர், "கவிஞரேறு, பாவலர் மணி, தமிழகத்தின் வோர்ட்ஸ்வொர்த்" என்று அழைக்கப்படுவார்.

### சொற்பொருள்:

- வெய்யோன் - கதிரவன்
- புரையோடி - உள்ளுக்குள் அரிக்கப்பட்டு
- முதல் - வேர்
- செல் - ஒருவகை கரையான்
- சோங்கி - வாட்டமுற்று

## சிக்கனம்



tnpsctamilnadu.weebly.com

ஆசிரியர் குறிப்பு;

- இவமை கவிஞர் எனப்போற்றப்படுபவர் கவிஞர் சுரதா
- இவர் திருவாரூர் மாவட்டம் பழையனூரில் பிறந்தவர்.
- இயற்பெயர் = இராசகோபாலன்

படைப்புகள் = தேன்மழை, துறைமுகம், சுவரும் சுண்ணாம்பும்.

- இவர் தமிழக இயலிசை நாடகமன்றம் வழங்கிய கலைமாமணி பட்டம் பெற்றவர்.
- இவருடைய "தேன்மழை" நூல் தமிழக அரசின் தமிழ் வளர்ச்சித்துறை பரிசு பெற்றுள்ளது.
- பாவேந்தர் நினைவு பரிசினை பெற்ற முதல் கவிஞர் இவரே.

சொற்பொருள்;

- பகட்டு வாழ்க்கை - ஆடம்பரமான வாழ்க்கை
- செட்டு - சிக்கனம்

இலக்கணக்குறிப்பு:

- சட்டதிட்டம் - உம்மைத்தொகை
- நீதிநூல் - இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை
- நீரூற்று - ஆறாம் வேற்றுமைத்தொகை
- தீராத - எதிர்மறைப் பெயரெச்சம்

## மனித நேயம்

ஆசிரியர் குறிப்பு;

- கவிஞர் ஆலந்தூர் கோ.மோகனரங்கன் 01.06.1942 இல் சென்னையை அடுத்த ஆலந்தூரில் பிறந்தவர்.
- பெற்றோர் = கோபால், மீனாம்பாள்
- இவரின்"இமயம் எங்கள் காலடியில்" என்னும் கவிதைத் தொகுப்பு நூல் தமிழக அரசின் பரிசினை பெற்றுள்ளது.

சொற்பொருள்:

- சிந்தை - உள்ளம்
- குன்றி - குறைந்து
- சாந்தி - தெருக்கள் கூடுமிடம்
- சிறுமை - இழிவு

இலக்கணக்குறிப்பு:

- சிந்தித்தேன் - தன்மை ஒருமை வினைமுற்று
- கன்றுகுரல் - ஆறாம் வேற்றுமைத் தொகை
- தலைகுனிந்து - இரண்டாம் வேற்றுமைத் தொகை

tnpsctamilnadu.weebly.com

## வேலைகளல்ல வேல்விகளே!

சொற்பொருள்:

- மூடத்தனம் - அறியாமை
- மூலதனம் - முதலீடு

இலக்கணக்குறிப்பு;

- வெறுங்கை - பண்புத்தொகை
- விரல்கள் பத்தும் - முற்றும்மை
- பாறையும் - உயர்வு சிறப்பும்மை
- மலர்ச்சோலை - இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்கதொகை
- கங்கையும் சிந்துவும் - எண்ணும்மை
- தெற்கு வடக்காய் - முரண்தொடை
- மாவிலி - உரிச்சொற்றொடர்

ஆசிரியர் குறிப்பு:

- கவிஞர் தாராபாரதி 26.02.1947இல் திருவண்ணாமலை மாவட்டம் குவளை என்னும் ஊரில் பிறந்தார்.
- பெற்றோர் = துரைசாமி, புஷ்பம் அம்மாள்

இவர் 34 ஆண்டுகள் ஆசிரியராக பணியாற்றி, நல்லாசிரியருக்கான டாக்டர்.இராதாகிருஷ்ணன் விருது பெற்றுள்ளார்.

படைப்புகள்

- புதிய விடியல்கள்,
- விரல்நுனி வெளிச்சங்கள்,
- பூமியைத் திறக்கும் பொன்சாவி,
- இன்னொரு சிகரம்.

## தீக்குச்சிகள்

இலக்கணக்குறிப்பு:

- புல்நுனி - ஆறாம் வேற்றுமைத்தொகை
- கண்ணீர் வெள்ளம், பசிக்கயிறு - உருவகம்
- மெல்லிய காம்பு - உருவகம்

ஆசிரியர் குறிப்பு:

- கவிஞர் அப்துல் ரகுமான் 1937இல் மதுரையில் பிறந்தவர்.

tnpsctamilnadu.weebly.com

இவர், "மரபுக் கவிதையின் வேர் பார்த்தவர்; புதுக்கவிதையில் மலர் பார்த்தவர்" எனப் பாராட்டப்படுபவர்.

படைப்புகள்

- பால்வீதி, நேயர் விருப்பம், சொந்தச் சிறைகள், கரைகளே நதியாவதில்லை, விலங்குகள் இல்லாத கவிதை.
- தமிழக அரசின் "பாரதிதாசன் விருது", தமிழ்ப்பல்கலைக்கழகம் வழங்கிய, "தமிழ் அன்னை விருது" போன்ற பல பரிசினை பெற்றுள்ளார்.

## வழிப்பாட்டுப் பாடல்கள் - சிவபெருமான்

சொற்பொருள்:

- காமகோபன் - காமனைக் காய்ந்தவன்
- ஆவணம் - அடிமையோலை

இலக்கணக்குறிப்பு:

- கண்ணுதல் - இலக்கணப் போலி
- பழ ஆவணம் - பண்புத்தொகை
- சொற்பதம் - ஒருபொருட் பன்மொழி

ஆசிரியர் குறிப்பு:

சுந்தரர்:

- சுந்தரர் தேவாரம் பன்னிருதிருமுறை வைப்பில் ஏழாந் திருமுறையாக வைக்கப்பட்டுள்ளது.
- சுந்தரர் திருமுனைப்பாடி நாட்டில் பிறந்தவர்.
- பெற்றோர் = சடையனார், இசை ஞானியார்.
- இயற்பெயர் = நம்பிஆரூரர்
- இவர் திருமுனைப்பாடி நாட்டை ஆண்ட நரசிங்க முனையரையர் என்ற சிற்றரசர் மகன்மை கொண்டு வளர்க்கப்பட்டார்.
- சிவபெருமான் இவரைத் தம் தோழராகக் கொண்டமையால் "தம்பிரான் தோழர்" என அழைக்கப்பட்டார்.
- இவர் எழுதிய திருதொண்டதொகை என்னும் நூலையே முதனூலாக கொண்டு சேக்கிழார் எழுதிய திருத்தொண்டர் புராணம் எழுந்தது.

## திருமால்

ஆசிரியர் குறிப்பு:

குலசேகர ஆழ்வார்:



tnpsctamilnadu.weebly.com

- ஆழ்வார் என்னும் சொல்லுக்கு ஆழ்ந்தறியும் அறிவைக் கருவியாக உடையவர் என்றும் எம்பெருமானுடைய மங்கலக் குணங்களில் ஆழங்காற்பட்டவர் என்றும் பொருள் கூறுவர்.
- குலசேகர ஆழ்வார் சேரநாட்டுத் திருவஞ்சிக் களத்தில் தோன்றியவர்.
- இவர் எழுதிய பாடல்கள் பெருமாள் திருமொழி எனப்படும்.
- அவை மொத்தம் 105 பாடல்கள் ஆகும்.
- ஆழ்வார்களின் அருளிச் செயலுக்குப் பெரிய வாச்சான் பிள்ளை என்பார் உரை எழுதியுள்ளார்.
- திருவாய்மொழிக்கு வடக்குத் திருவீதிப் பிள்ளை என்பார் எழுதிய ஈடு என்னும் பேருரை ஆழமும் அகலமும் உடையதாகும்.

சொற்பொருள்:

- ஆனாத - குறைவு படாத
- அரம்பையர்கள் - தேவமாதர்கள்

## புத்தர் பிரான்

ஆசிரியர் குறிப்பு:

- மணிமேகலை நூலின் ஆசிரியர் மதுரைக் கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார் ஆவார்.
- இவரைத் "தண்டமிழ் ஆசான்" எனப் புகழ்வர்.
- இவரின் காலம் கி.பி. இரண்டாம் நூற்றாண்டு.
- மணிமேகலை புத்த சமய காப்பியம்.
- இந்நூலுக்கு "மணிமேகலைத் துறவு" என்னும் வேறு பெயரும் உண்டு.
- இந்நூல் இந்திர விழவூரெடுத்த காதை முதலாகப் பவதிறம் அறுகெனப்பாவை நோற்ற காதை ஈறாக முப்பது காதைகளை உடையது.

சொற்பொருள்:

- தீர்த்தன் - தூயன்
- புராணன் - மிகப்பழையன்
- ஏமம் - பாதுகாப்பு
- ஆரம் - சக்கரக்கால்
- கடிந்தேன் - துறந்தேன்

இலக்கணக்குறிப்பு:

- தீநெறி - பண்புத்தொகை
- கடும்பகை - பண்புத்தொகை

tnpsctamilnadu.weebly.com

- உணர்ந்த முதல்வன் - பெயரெச்சம்

## அருகன்

### நூல் குறிப்பு:

- அருகதேவனை பற்றி கூறியுள்ள இந்நூல் நீலகேசியாகும்.
- சீவக சிந்தாமணிக்கு நிகராக கவிதைச் சுவைமிக்க இந்நூலை எழுதியவர் விவரம் தெரியவில்லை.
- இந்நூல் "நீலகேசித் தெருட்டு" என்றும் அழைக்கப்படும்.

### சொற்பொருள்:

- சாமரை - சாமரம் ஆகிய வெண்கவரி
- புடைபுடை - இருமருங்கினும்
- இயக்கர் - கந்தருவர்
- இரட்ட - அசைக்க
- சிங்காசனம் - அரியணை
- ஆசனம் - இருக்கை
- ஒளிமண்டிலம் - ஆலோகம்
- நிழற்ற - ஒளிர
- சந்திராதித்தம் - முத்துக்குடை
- சகலபாசனம் - பொற்குடை
- நித்தவிநோதம் - மணிக்குடை

## இயேசு பெருமான்

### சொற்பொருள்:

- கண்ணி - மரியன்னை
- காசினி - உலகம்
- வான்கதி - துறக்கம்
- மருவ - அடைய

### இலக்கணக்குறிப்பு:

- கண்ணிபாலன் - நான்காம் வேற்றுமைத்தொகை

### ஆசிரியர் குறிப்பு:

### எச்.ஏ.கிருடினப்பிள்ளை

- இரட்சணியம் என்பதற்கு ஆன்ம ஈடேற்றம் என்பது பொருளாம்.

tnpsctamilnadu.weebly.com

- ஆன்ம ஈடேற்றம் விரும்புவார் செல்லும் சிந்தனை யாத்திரை என்பதுவே இரட்சணிய யாத்திரிகம் என்பதன் பொருள்.
- ஜான் பனியன் என்பார் எழுதிய பில்க்ரிம்ஸ் பிராகிரஸ் என்ற நூலினையே இரட்சணிய யாத்திரிகம் என படைத்துள்ளார்.
- எச்.ஏ.கிருடினப்பிள்ளை திருநெல்வேலி மாவட்டம் கரையிருப்பு என்னும் ஊரினர்.
- பெற்றோர் = சங்கர நாராயணபிள்ளை, தெய்வநாயகி அம்மை
- படைப்புகள் = இரட்சணிய யாத்திரிகம், இரட்சணிய மனோகரம், போற்றித் திருவகவல்.
- இவரை "கிறித்துவ கம்பர்" என்பர்

## நபிகள் நாயகம்

### சொற்பொருள்:

- பொறி - ஒளிப்பிழம்பு
- வடிவார் - வடிவினையுடையார்
- நவியார் - நபிகள் நாயகம்

### இலக்கணக்குறிப்பு:

- மெய்ப்பொருள் - இருபெயரொட்டு பண்புத்தொகை
- சுவர்க்கபதி - இருபெயரொட்டு பண்புத்தொகை

### ஆசிரியர் குறிப்பு:

### உமறுப்புலவர்:

- உமறுப்புலவர் தூத்துக்குடி மாவட்டம் நாகலாபுரம் என்னும் ஊரினர்.
- தந்தை = செய்கு முகமது அலியார் என்னும் சேகு முதலியார்
- கடிகை முத்துப் புலவரின் மாணவர் இவர்.
- இவரின் காலம் பதினேழாம் நூற்றாண்டு.
- சீறாப்புராணம் வள்ளல் சீதக்காதியின் வேண்டுகோளுக்கு இணங்க எழுதினார்.
- நூல் நூற்றும் முன்னரே சீதக்காதி இறந்ததால் அபுல் காசிம் என்பார் உதவியுடன் எழுதி முடிக்கப்பட்டது.
- பானு அஹமது மரைக்காயர் என்பவரே நூலை முழுவதும் எழுதி முடித்தார்.
- அது "சின்னச் சீறா" எனப்பட்டது.
- உமறுப்புலவர் முதுமொழிமாலை, சீதக்காதி நொண்டி நாடகம் முதலிய நூல்களையும் எழுதியுள்ளார்.

tnpsctamilnadu.weebly.com




**R.MOHANA SUNDARI.. - M.A., B.Ed.,- Revenue Assistant - Dindigul**

tnpsctamilnadu.weebly.com